# 23. சில நிலங்களை விற்பனை செய்வதற்கான வரி







# 23. சில நிலங்களை விற்பனை செய்வதற்கான வரி

## 1. அறிமுகம்

வரியொன்று விதிக்கப்படுவதற்காக அரசியலமைப்பின் 148ஆம் சரத்தின் ஊடாக பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ள அதிகாரங்கள், சட்டங்களின் ஊடாக பிற ஏதேனும் அதிகாரத்திற்கு கையளிப்பதற்கு பாராளுமன்றத்திற்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் கீழ், உள்ளூராட்சி மன்றத்தின் அதிகார

எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு நிலத்தை ஏலம் விடுவதன் மூலமாகவோ அல்லது ஒரு தரகர் மூலமாகவோ விற்கும்போது, அந்த நிலத்தை விற்பதன் மூலம் கிடைக்கும் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதத்திற்கு (1%) சமமான வரி சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு செலுத்தப்படும்.

## 2. சட்டரீதியான அதிகாரம்

(அ) 252 ஆம் அதிகாரமானான மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 247ஆம் பந்தி;

(ஆ) 255 ஆம் அதிகாரமான மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 165 ஆம் பந்தி;

(இ) 1987 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 வது பிரிவுக்கு அமைவாக.

## 3. தகைமைகள்

ஒரு ஏலதாரர் அல்லது தரகர், அல்லது அத்தகைய நபரது பிரதிநிதி ஒருவரால் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் எந்தவொரு நிலத்தையும் விற்பனை செய்வதற்கான ஏலதாரர் தரகர் அல்லது முகவராக ஒருவர் செயல்பட்டால், அந்த நபர் இந்த வரியை செலுத்த பொறுப்பாவார்.

**குறிப்பு:**

i. ஒரு வணிக வங்கி அல்லது பிற நிதி நிறுவனத்தால் ஒரு நிலம் அல்லது வீடு அடமானம் வைக்கப்பட்டு கடன் பெறப்பட்டிருந்தால், கடனை வசூலிக்கும் நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனம் தனக்கு வழங்கப்பட்ட அட்டோர்னி அதிகாரத்துக்கு அமைவாக, வங்கி அல்லது நிதி நிறுவனம் அந்த நிலத்தை ஒரு பொது ஏலத்தில் விற்கும்போது, ஏலத்தில் விற்க முடிவு செய்த தொகையில் ஒரு சதவீதம் ஏலதாரர் அல்லது தரகர் அல்லது அத்தகைய நபரது முகவரிடமிருந்து அறவிட்டு பிரதேச சபைக்கு வாரியாக செலுத்துதல் வேண்டும்.

ii. மேற்கூறிய ஏலத்தில் ஒருவரும் நிலத்தை வாங்க முன்வராதபோது, வேறு வழியில் நிலத்தை விற்பதற்கு வங்கி அல்லது நிதி நிறுவனம் செயற்படும் சந்தர்ப்பங்களில்கூட, ஏலதாரர் அல்லது தரகர் அல்லது முகவர் இந்த வரியை செலுத்துவதற்கு கடமைப்பட்டவர்களாவர்.

iii. நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பேரில் எந்தவொரு சொத்தையும் ஏலம் விடும்போதுகூட, இந்த வரி விதிக்கப்படும். தொடர்புடைய நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தும் அதிகாரி அல்லது ஏலதாரர் இந்த வரியை கட்டாயம் செலுத்த வேண்டும்.

## 4. கட்டணம்

சம்பந்தப்பட்ட நிலத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகையில் ஒரு சதவீதம் (1%) வரியாக செலுத்தப்படுதல் வேண்டும்.

**குறிப்பு:** சில ஏலதாரர்கள் அல்லது தரகர்கள் நிலத்தின் பெறுமதியை குறைத்து நிலத்தின் பத்திரத்தை தயாரித்து இருக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதனை உறுதிப்படுத்துவதற்கும் நிகழ்வுகளைக் கண்டறிவதற்கும் மாகாண வருவாய் துறையிடமிருந்து அந்த நிலத்தின் உண்மையான மதிப்பை மாகாணத்தின் மாகாண வருமானத் திணைக்களத்திடமிருந்து கண்டறிவது செயலாளரின் / நகர ஆணையாளரின் கடமையாக இருக்கிறது.

## 5. நடைமுறை

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| ஒரு நில ஏலதாரர் அல்லது தரகர் மூலம் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் விற்கப்படும் எந்தவொரு நிலத்தையும் கவனித்தல் மற்றும் அடையாளம் காணுதல் | நிலையான ஆய்வு மற்றும் கண்காணிப்பு மூலம் (விளம்பரம், நில உபபிரிவு ஒப்புதல் கோரிக்கைகள் மற்றும் ஏலதாரர்களின் வலைத்தளங்கள், இணைய முகப்புத்தக ஆய்வு) என்பவற்றில் இருந்து தகவல்களைத் திரட்டுதல் | வருமானப் பரிசோதகர் / சபையின் மற்றைய ஆளனியினர் |
| அத்தகைய விற்பனை தொடர்பாக செயலாளருக்கு அறிக்கை செய்தல். | அறிக்கை செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலேயே | வருமானப் பரிசோதகர் உள்ளிட்ட, வருமான விடயத்துடன் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களும். |
| விற்பனையானது பகிரங்க ஏலத்தின் மூலம் மேற்கொள்ளப்படுமெனின், அந்த இடத்திற்குச் சென்று விற்பனை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் உரிய வரியை கொடுப்பனவு செய்யுமாறு விதிக்கப்படுகின்ற வரி அறிவித்தலை (இணைப்பு) ஏலதாரருக்கு ஒப்படைத்தல். | ஏலம் நடாத்தப்படும் திகதியில் | வருமானப் பரிசோதகர் |
| பகிரங்க ஏலத்தில் அல்லாமல் வேறு ஏதேனும் விதத்தில் காணி விற்பனை செய்யப்பட்டிருந்தால், அந்தக் காணி விற்பனை செய்த தொகைக்குச் சமமான வரியைச் செலுத்துமாறு விதிக்கப்படுகின்ற வரி அறிவித்தலை (இணைப்பு) இலத்திரனியல் செய்தி ஊடாக அல்லது வருமானப் பரிசோதகர் ஊடாக வரிக்கு உட்பட்ட நபருக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தல். | பகிரங்க ஏலத்தில் செய்யப்படுகின்ற விற்பனையெனின், அன்றைய தினம் அல்லது பிற விதத்திலான ஒரு விற்பனையாக இருக்கும் சந்தர்ப்பத்தில், விற்பனை செய்யப்பட்ட திகதியிலேயே அல்லது அதற்குப் பின்னைய திகதியில். | நகர ஆணையாளர் / செயலாளர் |
| உரிய வரியை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்கி சில இடங்களை விற்பனை செய்வதன் ஊடாக வரி அட்டவணை மற்றும் கணக்குகளை இற்றைவரைப்படுத்துதல். | வரியை அறவிட்டவுடன் | பகிரங்க ஏலமெனின், வருமானப் பரிசோதகராலும், பிற சந்தர்ப்பங்களில் எனின் முன் அலுவலக உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

## 6. வரி கொடுப்பனவை மீறியுள்ள சந்தர்ப்பத்தில் நடைமுறைகள்

| நடைமுறை | கால எல்லை | அதிகாரம் |
|---|---|---|
| வரி ஏய்ப்பு செய்பவருக்கு (செலுத்த தவறியவர்களுக்கு) நினைவூட்டல் | வரி அறிவித்தல் ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்கள் சென்றபின்னர் அல்லது விற்பனை செய்யப்பட்டதாக அறிக்கை கிடைத்தவுடன் | நகர ஆணையாளர் / செயலாளர் |
| நினைவூட்டல் அறிவிப்புக்கு இணங்கவில்லை என்றால் நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு கோரிக்கையை தாக்கல் செய்யுங்கள் | அறிவித்த திகதி அல்லது நினைவூட்டல் திகதி தொடக்கம் 7 நாட்கள் கடந்தவுடன் | நகர ஆணையாளர் / செயலாளரின் அதிகாரத்தைக் கையளிப்பதன் அடிப்படையில் வருமானப் பரிசோதகர். |
| அபராதமாக வரி விதிக்க உத்தரவுகளை பிறப்பித்தல் | வழக்குத் திகதியில் | நீதவான் |
| அறவிடப்பட்ட தொகைக்கு பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் மற்றும் வருமானம் தொடர்பான தகவல்களை வருமான விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிக்கை செய்தல். | உரிய தொகை அறவிடப்பட்டவுடன் | வருமானப் பரிசோதகர் |
| அறவிடப்பட்ட வரித்தொகை தொடர்பிலான ஆவணங்களை இற்றைவரைப்படுத்துதல். | வருமானப் பரிசோதகரது அறிக்கை கிடைத்தவுடன் | விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் |

இணைப்பு

## . . . . . . . . . . . . சபை

**சபை இலைச்சினை**

## சில நிலங்களை விற்பனை செய்வதற்கான வரி

எனது இலக்கம் :. . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . 20 ஆந் திகதி

திரு / திருமதி / செல்வி . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கனம் ஐயா, அம்மணி

## சில நிலங்களை விற்பனை செய்வதற்கான வரி

. . . . . . . . . . . .. . . சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ஆகிய விலாசத்தில் அமைந்துள்ள, வரிபணம் இலக்கம் . . . . . . . . * ஆகிய காணியானது , . . . 20 . . . . . . . . . ஆகிய திகதியில் அல்லது அதற்கு அண்மித்த திகதிகளில், உங்களால் / உங்களது நிறுவனத்தினால் * பிரசித்த ஏலத்தில் அல்லது பிற விதத்தில் ரூபா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (ரூ. . . . . . . . . . . . . . ) தொகைப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. 252 ஆம் அதிகாரமான மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 247உ / 255ஆம் அதிகாரமான நகர சபை கட்டளைச்சட்டத்தின் 165ஈ/197ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154ஆம்* பந்தியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அவ்வாறு அறவிடப்பட்ட தொகையின் 1 சதவீதமான தொகையான ரூபா . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (ரூ. . . . . . . . . . . . . ) தொகையை வரியாக நீங்கள் இந்தச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். அத்தொகையை அவ்வறிவித்தல்

திகதி தொடக்கம் 7 நாட்களுக்குள் . . . . . . . . . . . . . . சபைக்கு கொடுப்பனவு செய்யுமாறு, தங்களுக்கு இத்தால் விதிக்கிறேன்.

03 ஏதேனும் அடிப்படையில் இந்த விதிகளின்படி செயற்படுவதற்கு உங்களால் முடியாது போனால், அவ்வரியை அறவிடும்பொருட்டு, உங்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தில் விடயங்கள் அறிக்கை செய்யப்படவேண்டியேற்படும் என்பதை மேலும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம் - நம்பிக்கையுள்ள

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

நகர ஆணையாளர் / செயலாளர்

...................................சபை

QR Code